# சிங்கப்பூரில் நோன்பு திறப்பு நல்லிணக்க நிகழ்ச்சி

பதிவு செய்த நாள்: ஜூன் 14,2018 15:17

சிங்கப்பூர் : ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர்க் கிளை தனது 78 ஆவது சிறப்பு நிகழ்ச்சியாக ஜூன் பத்தாம் தேதி பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு மண்டபத்தில் நோன்பு திறப்பு நல்லிணக்க நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தியது. சிங்கப்பூர் அரசு பிரதமர் துறை இரண்டாம் நிதி – கல்வி – சட்ட அமைச்சர் குமாரி இந்திராணி ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சங்கத்தின் சேவைகளை வெகுவாகப் பாராட்டியதுடன் இது போன்ற நிகழ்வுகள் பல இன மக்கள் ஒன்றுகூடி சமூக ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்த உதவும் என்றும் கூறி வாழ்த்தினார். நிகழ்வில் பத்து குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை சங்கத்தின் சார்பாக அமைச்சர் வழங்கிப் பெருமைப்படுத்தினார்.சங்கத்தின் தலைவர் பட்டயக் கணக்காய்வாளர் கவிஞர் மு.காதர் வரவேற்புரை ஆற்றினார். பல்வேறு அமைப்புக்களின் தலைவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**- நமது செய்தியாளர் வெ.புருஷோத்தமன்**

